International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 06 Issue: 04 October to December 2024 www.irjtsjournal.org

# இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் இளைஞர்களின் பங்களிப்புகளும் சவால்களும் : ஒலுவில் பிரதேச இளைஞர்களை மையப்படுத்திய ஆய்வு

T. Mohamed Mufas,
*Temporary Tutor at 4S Academy,*
*Sri Lanka.*

**ஆய்வுச்சுருக்கம்**

பொதுவாக உலகில் உள்ள பல நாடுகள் பல்லின சமூக அமைப்பினை கொண்டுள்ளது. அவற்றில் இலங்கையும் ஒன்றாகும். இவ்வாறு பல்லின மக்களைக்கொண்ட நாடுகளில் இனங்களுக்கிடையில் அவ்வப்போது முரண்பாடுகள் ஏற்படுகின்றன இதற்கு இலங்கையும் ஒரு எடுத்துக்காட்டாகும். அந்த வகையில் இலங்கையிலுள்ள இளைஞர்கள் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அண்மைக்காலங்களில் பாரிய பங்களிப்புகளை வழங்கிவருகின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வானது ஒலுவில் பிரதேச இளைஞர்கள் பல்லின மக்களுக்கிடையிலான இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகள், அதற்காக இளைஞர்களின் பங்களிப்புகள் என்பன குறித்துக் கவனம் செலுத்தப்படுகின்றது. அத்தோடு பல்லின சமூகங்களை ஒன்றிணைப்பதற்காக இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடுகளும், அதன் போது அவர்கள் எதிர்நோக்கக்கூடிய சவால்கள் போன்ற விடயங்களை ஆராய்ந்து வெளிக்கொண்டுவருவதே இவ்வாய்வின் நோக்கங்களாகும். இன்றைய சூழலில் இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு பல தொண்டு நிறுவனங்கள் இளைஞர்களை இணைத்து பயிற்சிப் பட்டறைகளையும் இதன் மூலமாக பல்வேறு வேலைத்திட்டங்களையும் செயற்படுத்தி இன நல்லிணக்கத்திற்கு பங்களிப்பினை வழங்கி வருகின்றது. இவ் வேலைத்திட்டங்களின் மூலமாக ஒலுவில் பிரதேச இளைஞர்களிடையே இனப் பாகுபாடுகளும் முரண்பாடுகளும் இழிவளவாக்கப்பட்டு இலங்கையில் காணப்படுகின்ற பல்லின சமூக கட்டமைப்புக்கிடையே புரிந்துணர்வும்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2024, IRJTSR

ஒற்றுமையும் இன நல்லுறவும் உயர்வடையும் என்ற அடிப்படையில் இளைஞர்களை மையப்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இதன்படி ஒலுவில் பிரதேச இளைஞர்கள் ஆரம்ப காலங்களை விட அண்மைக்காலமாக பல்லின மக்களுக்கிடையிலான இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டுவருவதுடன் இதற்கு இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதை இலக்காக கொண்ட தொண்டு நிறுவனங்கள், இப்பிரதேச இளைஞர்கள், ஊடகம் என்ற வகையில் ஒலுவில் ஊடகம் (Oluvil Media) மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் போன்றோரின் பங்களிப்புகள் முக்கியமானதாக காணப்படுவதனை இவ் ஆய்வின் மூலமாக கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இப்பிரதேசத்தின் பொது மக்களும் இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது துணை நிற்பதனையும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் இப்பிரதேச இளைஞர்கள் இன நல்லிணக்க ஏற்படுத்த பல செயற்பாடுகளையும் பங்களிப்புகளையும் மேற்கொண்டாலும் இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதில் இளைஞர்கள் மொழிப்பிரச்சனை, இன நல்லிணக்கப்பற்றிய விழிப்புணர்வு போதாமைமை, கடந்த காலங்களில் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறை நிகழ்வுகளை மறக்காமை, இப்பிரதேச இளைஞர்களை ஒன்றிணைப்பதிலுள்ள சிக்கல், இளைஞர் சமுதாயத்தின் ஒரு பகுதியினர் சமூக அக்கறையற்றவர்களாக காணப்படுதல், மாற்றுமத சகோதரர்கள் இப்பிரதேசத்திலிருந்து தூரப்பிரதேசங்களில் வசிப்பது போன்ற பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர். ஆகவேதான் ஆய்வுப்பிரதேசத்தில் இன நல்லுறவினை ஏற்படுத்ததுவதில் இவ்வாறான சவால்களின் காரணமாக இவர்களுடைய பங்களிப்பும் போதாத நிலையும் காணப்படுகின்றது என்பதனை ஆய்வுப்பிரச்சினையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் இவ்வாய்வானது பண்பு ரீதியான விவரணப் பகுப்பாய்வு முறையாக காணப்படுவதோடு இதற்கான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகள் அவதானம், நேர்காணல் மூலம் பெறப்பட்டுள்ளதுடன் இரண்டாம் நிலைத் தரவுகள் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இணையத்தளங்களிலிருந்து பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்** : இளைஞர்கள், பல்லின மக்கள், இன நல்லிணக்கம், ஒலுவில் பிரதேசம்

## ஆய்வு அறிமுகம்

பொதுவாக இன்றைய சூழலில் அதிகமாக பேசப்படுகின்ற எண்ணக்கருக்களில் இன நல்லுறவும் ஒன்றாக அடையாளப்படுத்தலாம். அந்த வகையில் இன நல்லுறவு என்பது பல்லின சமூகத்தில் ஒரு சமூகத்தவர் அல்லது இனத்தவர் பிற சமூக மற்றும் மதத்தவர்களுடன் அவர்களது உரிமைகள் பாதிக்கப்படாத வகையில்


© 2024, IRJTSR

ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் வாழ்வதாகும். இன நல்லிணக்கம் என்ற எண்ணக்கரு இன்று அனைவராலும் பேசப்பட்டு வரும் முக்கியமான விடயமாகும். உலகில் பெரும்பாலான நாடுகள் பல இன மக்கள் ஒன்றிணைந்து வாழ்கின்ற நாடுகளாகவே காணப்படுகின்றன. உதாரணமாக இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளை குறிப்பிடலாம் (வினோதினி ராஜேந்திரன், 2021). இவற்றில் இலங்கையினையும் உதாரணமாக குறிப்பிடலாம். இலங்கை அமைந்துள்ள தென்னாசியாவில் பெரும்பாளான நாடுகளில் பல்லினத் தன்மை கொண்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் எடுத்துக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். ஆயினும் இவ்வாறு பல்லின தன்மை கொண்ட நாடுகளில் அவ்வப்போது இனரீதியான வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு இன வன்முறைகளும் முரண்பாடுகளும் ஏற்படவே செய்கின்றது. அந்தவகையில் வரலாற்றினை நோக்கும்போது இலங்கையில் பல்வேறு நிலைகளில் இனங்களுக்கிடையிலான மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதனால் வன்முறை செயற்பாடுகளும் இனங்களுக்கிடையில் நடைபெறுகின்றது இது இன நல்லுறவை பாதிக்கின்றன. இதன்படி இன முரண்பாடுகளுக்கும் இலங்கை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் எமது நாட்டில் பிரதானமாக சிங்கள், தமிழ், முஸ்லிம் இனக்குழுக்கள் வாழ்வதுடன் குறிப்பிட்டளவு பறங்கிய இனத்தவரும் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையின் வரலாற்றை பொறுத்தவரை இனங்களுக்கிடையிலான மோதல்களும் வன்முறைகளும் தொடர்ந்து இடம்பெற்ற வண்ணமே உள்ளன இவ்வாறான விடயங்கள் பல்லின சமூகங்களிடையே பிரிவினையை ஏற்படுத்தியிருக்கின்றன. இலங்கை அரசாங்கம் தேசிய ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும் இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு பல அமைப்புகளை உருவாக்கியதுடன் அவற்றின் மூலமாக பல செயற்திட்டங்களை முன்னெடுத்தும் வருகின்றன. எனினும் இலங்கை வாழ் மக்களிடையே முழுமையாக இன ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை என்பது வெளிப்படையான உண்மையாகும் (வினோதினி ராஜேந்திரன், 2021). ஏனெனில் இலங்கையானது பல இனங்கள், மதங்கள், கலாச்சாரங்கள், மொழிகள் போன்றவற்றைனை கொண்டு அமையப்பெற்ற நாடு என்பதாலயே ஆகும். அதிலும் குறிப்பாக பிரித்தானிய காலம் தொடக்கம் இன்று வரையில் ஏதோவொரு விடயம் சார்ந்து பல்லின மக்களிடையே வன்முறைகள், கலவரங்கள் மற்றும் முரண்பாடுகள் போன்றன ஏற்படவே செய்துள்ளன. ஆயினும் இலங்கையில் இந்த பல்வகைமையை நாட்டின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பயன்படுத்துவதனை தவிர்த்து இன ரீதியான பாகுபாட்டுக்கும் முரண்பாட்டுக்கும் பயன்படுத்தி இன நல்லிணக்கத்தினை சீர்குலைத்து வருகின்றமையானது கவலையினை ஏற்படுத்துகின்றதாக காணப்படுகின்றது. இதற்கு மாற்றமாக இலங்கையில் மக்கள் பல்லினத்தன்மையினை ஏற்றுக்கொண்டு வாழுமிடத்து எமது நாட்டில் இயல்பாகவே இன நல்லிணகக்கம், புரிந்துணர்வு, ஐக்கியம், விட்டுக்கொடுப்பு, சகவாழ்வு போன்ற எண்ணக்கருக்கள் வளர்ச்சியடையும்

எனவேதான் ஒரு நாட்டிற்குள் சமூகப்பிரிவுகளுக்கிடையில் காணப்படும் இன, மத, மொழி வேறுபாடுகள் குறைந்து இப்பிரிவுக்கிடையில் இன நல்லிணக்கத்தினை கட்டியெழுப்புவதற்காக பல்வேறுபட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இளைஞர்களின் பங்களிப்பானது மிகவும் முக்கியமானதாகும். இதன்படி ஒரு நாட்டில் புதிதாக நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி சார்ந்த விடயங்கள் மற்றும் சமாதானம், நல்லிணக்கம் சார்ந்த விடயங்களை ஏற்படுத்துவதிலும் அதனை முன்னெடுத்துச் செல்வதிலும் அந்நாட்டில் வாழும் இளைஞர்களுக்கு கணிசமான அளவு பங்கு உள்ளது. இலங்கை போன்ற பல்லின மக்கள் வாழும் நாட்டில் இன நல்லுறவு, சமாதானம் என்பவற்றை கட்டியெழுப்புவதில் இளைஞர்களின் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்படும் சமூகப்பணிகள் பெரும் மாற்றத்திற்கான உறுதுணையாக அமையும். இன்று தேசிய ரீதியிலும் பிரதேச ரீதியிலும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பல்வேறு பயிற்சிப் பட்டறைகளும் செயலமர்வுகளும் இளைஞர்களை மையப்படுத்தியதாகவே நடாத்தப்படுகின்றன (வினோதினி ராஜேந்திரன், 2021). அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில் அட்டாளச்சேனை பிரதேச செயலகத்திற்குள் உற்பட்ட ஒலுவில் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் இளைஞர்களை உள்ளடக்கிய வகையிலேயே இந்த ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. இந்த பிரதேச செயலகப் பகுதியில் பல்லின மக்களும் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக முஸ்லிம்கள், சிங்களவர்கள், தமிழர்கள் என பல்வேறு இனத்தவர்களும் இவர்கள் இஸ்லாம், பௌத்தம், இந்து போன்ற சமயங்களை பின்பற்றுகின்ற மக்களாகவும் பன்மைத்துவ சமூக கட்டமைப்பினை கொண்ட பிரதேச செயலகமாகவும் திகழ்கின்றது. இந்த செயலகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் ஒலுவில் பிரதேச முஸ்லிம் இளைஞர்கள் இன நல்லுறவை கட்டியெழுப்புவதில் அவர்களின் பங்களிப்பு பற்றியும், இதனை மேற்கொள்ளும் போது இளைஞர்கள் எவ்வாறான சவால்களை எதிர்கொள்ளுகின்றார்கள், இவற்றிலிருந்து எவ்வாறு மீட்டெடலலாம் என்பது தொடர்பான ஆலோசனைகளை பற்றும் பரிந்துரைகள் இறுதியில் முன்வைக்கப்பட்டுள்ளன. எனவேதான் முதலியவற்றினை உள்ளடக்கியவகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## ஆய்வுப் பிரச்சினை

இலங்கையில் பல்லின மக்களுக்கிடையே இன ரீதியான வன்முறைகளும் இனவாதமும் அவ்வப்போது தலைதூக்கப்பட்டு வருகின்றமையானது முக்கியமானதோர் பிரச்சினையாக காணப்படுகின்றது. இந்நிலையின் காரணமாக அண்மைக்காலத்தில் இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லுறவானது கீழ்மட்டத்தில் காணப்படுகின்றமையினை தங்களால் அவதானிக்க முடிகின்றது. இதன் அடிப்படையிலேயே ஒலுவில் பிரதேச இளைஞர்கள் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான பல பங்களிப்புகளை அண்மைக்காலத்தில் செயற்பாடுத்தி வருகின்ற போதிலும் மொழிப்பிரச்சினை, இன நல்லிணக்கம் பற்றிய விழிப்புணர்வு போதானைமை, கடந்த காலங்களில் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்

© 2024, IRJTSR 

மேற்கொள்ளப்பட்ட வன்முறை நிகழ்வுகளை மறக்காமை, இப்பிரதேச இளைஞர்களை ஒன்றிணைப்பதிலுள்ள சிக்கல் முதலிய பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர் இதன் காரணமாக இன நல்லிணக்கத்தினை கட்டியெழுப்பும் செயற்பாட்டினை இப்பிரதேச இளைஞர்களினால் முழுமையாக் செயற்படுத்த முடியாதுள்ளது என்பதனை ஆய்வுப்பிரச்சினையாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வின் நோக்கம்

இந்த ஆய்வின் ஊடாக ஒலுவில் பிரதேசத்தில் இன நல்லிணக்கத்தினை கட்டியெழுப்புவதில் இப்பிரதேச இளைஞர்கள் எவ்வாறான செயற்பாடுகளின் மூலம் பங்களிப்பு வழங்கி வருகின்றார்கள் என்பதனை வெளிக்கொண்டு வருவதுடன் பல்லின சமூகங்களிடையே இன நல்லிணக்கத்தைக் ஏற்படுத்துவதில் இளைஞர்கள் எத்தகைய சவால்களை எதிர் நோக்குகின்றார்கள் தொடர்பாகவும், ஏனைய சமூகங்களுடன் இன நல்லிணக்கத்தை பேணி வாழ்வதற்கு தடையாக உள்ள காரணிகள் பற்றியும் ஆராய்வதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு வினாக்கள்

1. இப்பிரதேச இளைஞர்கள் பன்மைத்துவ சமூகத்தில் இன நல்லுறவின் அவசியம் பற்றி புரிந்துள்ள விதத்தினை அறிதல்
2. இப்பிரதேசத்திலுள்ள பல்லினங்களிடையே இன நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் இளைஞர்களின் பங்களிப்பு யாது?
3. இன நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் இப்பிரதேச இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எவை?

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்பு ரீதியான விவரணப் பகுப்பாய்வு முறையாக காணப்படுவதோடு இதற்கான தரவுகள் முதல் நிலைத் தரவு, இரண்டாம் நிலைத் தரவுகள் ஆகிய முறைகளைக் கொண்டு தகவல் சேகரிக்கப்பட்டன. முதல்நிலைத் தரவுகள் என்ற வகையில் அவதானம், நேர்காணல் ஆகிய முறைகள் பயன்படுத்தப்பட்டன. இங்கு அவதானம் ஆய்வுப் பிரதேசத்தில் நீண்ட காலமாக ஒரு ஆய்வாளன் என்ற வகையில் அவதானிக்கப்பட்ட விடயங்களின் தொகுப்பாகவே இது காணப்பட்டுள்ளது. அத்துடன் நேர்காணல் குறிப்பிட்ட பகுதியில் எளிய எழுமாற்று மாதிரியின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்;ட பொது மக்கள், இளைஞர்கள், புத்திஜீவிகள், சமூகத் தலைவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் போன்றவர்களிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டன. மேலும், இரண்டாம் நிலைத் தரவுகளுக்காக இன நல்லிணக்க தொடர்பான நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2024, IRJTSR

## கலந்துரையாடல்களும் அடைவுகளும்

பல்லின மக்கள் வாழும் இலங்கை நாடானது இன்று சகவாழ்வு நல்லிணக்கம் போன்றவற்றின் தேவைப்பாட்டில் உள்ளது. நாட்டின் அனைத்து பகுதிகளிலும் வாழும் மக்களிடையே இன நல்லுறவு என்பது அவசியமான ஒன்றாகும். இன நல்லிணக்கத்தின் ஊடாகவே ஒரு நாட்டினுடைய கலாச்சாரத்தை மேம்படுத்த முடியும். மக்கள் மத்தியில் இனரீதியான வன்முறைகள் ஏற்படுமாக இருந்தால் ஒரு நாட்டின் அமைதியை சீர்குலைக்கும் வகையில் ஆயுத மோதல், போராட்டங்கள், தீவிரவாதம், வன்முறை என்பன அதிகரிக்கக்கூடும். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் இன கலவரம் ஏற்படும்போது அதனை அடிப்படையாகக் கொண்டு முழு நாட்டிலும் இனக்கலவரங்கள் ஏற்படக்கூடும். இதற்கு எடுத்துக்காட்டாக இலங்கையில் இடம்பெற்ற பல்வேறு இனக் கலவரங்களை குறிப்பிடலாம். இலங்கையில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் ஏற்பட்ட பல்வேறு இன ரீதியான முரண்பாடுகள், 30 வருட காலமாக இடம்பெற்ற யுத்தம், குறிப்பாக 2019 ம் ஆண்டு இடம்பெற்ற குண்டு தாக்குதல் என்பன இங்கு வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களிடையே தூரமான இடைவெளியையும் மன விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது (வினோதினி ராஜேந்திரன், 2021). இதனால் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, ஐக்கியம் என்பன சீர்குலைந்து இன நல்லிணக்கப்படுத்தல் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. ஆயினும் இவ்வாறு காணப்படுகின்ற மட்டுப்பாட்டினை ஒதுக்கி பல்லினங்களுக்கிடையே இன நல்லுறவை ஏற்படுத்த இலங்கைவாழ் அனைத்து இளைஞர்களினதும் பங்களிப்பு முக்கியமானதாகும். இதன் அடிப்படையிலேயே ஒலுவில் பிரதேச இளைஞர்களின் இன நல்லிணக்கத்திற்கான பங்களிப்பினை பின்வருமாறு நோக்க முடிகின்றது.

## இன நல்லுறவைக் கட்டியெழுப்புவதில் இளைஞர்களின் பங்களிப்பு

இன்று நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லுறவு என்பது பலவீனமடைந்த நிலையிலேயே உள்ளது. இதன் காரணமாக மக்களிடையே இன நல்லிணக்கத்தையும் சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. இவற்றை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், சிவில் அமைப்புகள் என பலரும் செயற்பட்டு வருகின்றனர். இவர்களோடு இணைந்த வகையில் இளைஞர்களும் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர் (வினோதினி ராஜேந்திரன், 2021). இதன்படி ஒலுவில் பிரதேசத்தில் இன நல்லிணக்கத்துக்கான வேலைத்திட்டத்தினை மேற்கொள்ளும் குழுக்களாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும். அதாவது ஒலுவிலின் பெரிய பள்ளிவாயல் நிர்வாகம், பாடசாலையின் பழைய மாணவர்கள், விளையாட்டு கழகங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அக்னிவில் (Agniwill) அமைப்பு என்போரைக் குறிப்பிடலாம். இவர்கள் இன நல்லிணக்கத்தக்கான

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2024, IRJTSR

வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதனடிப்படையில் இந்த அமைப்புகளினூடாக இளைஞர்களின் இன நல்லிணக்க செயற்பாடு முயற்சிகளை பின்வருமாறு குறிப்பிட்டுக்காட்டலாம். இதன்படி ஒலுவில் பிரதேச இளைஞர்கள் ஆரம்ப காலம் முதல் இன நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதனை நோக்கமாக்க கொண்டு சுதந்திரதின நிகழ்வுகளை நடாத்துதல், மரநடுகை செயற்பாடுகளில் ஈடுபடுதல், இரத்ததான நிகழ்வுகளை நாடாத்துதல் போன்றவற்றினை செயற்படுத்தி வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளில் இப்பிரதேச மதத் தலைவர்கள், மாற்று மதச் சகோதர மதத் தலைவர்கள், பாதுகாப்புத்துறையினர் எனப் பலரை அழைத்து நல்லிணக்கம் பற்றி இவர்களின் பேச்சு மற்றும் கருத்துக்களினூடாக இன நல்லுறவினை மேம்படுத்தி வந்தாலும் இவை அந்தளவுக்கு ஆக்கபூவமான தாக்கத்தினை இளைஞர்களிடையே ஏற்படுத்தியிருக்கவில்லை எனவேதான், இன நல்லிணக்கத்தினை பாரிய மட்டங்களில் செயற்படுத்தவும் இதில் இளைஞர்களின் முழுமையான பங்களிப்புகளை வெளிப்படுத்தி நடைபெற வேண்டும் என எதிர்பார்க்கப்பட்ட போது ஒரு சில இளைஞர்கள் வெளி தன்ணார்வ தொண்டு அமைப்புகளுடன் இணைந்து நல்லிணக்கச் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கினர். மேலும் இவ்வாறான தன்ணார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் போன்றன ஏற்பாடு செய்கின்ற இன நல்லுறவு தொடர்பான நிகழ்வுகள், பயிற்சி பட்டறைகள் மற்றும் கள ஆய்வுச் செயற்பாடுகளில் பங்குதாரர்களாக இவர்கள் மாற்றம் பெற்றதுடன் அதனூடாக இனங்களுக்கிடையில் இன நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதைனை நோக்காக்ககொண்டு பல செயற்றிட்டங்களை தற்போது வரையில் ஒலுவில் பிரதேசத்தில் மேற்கொண்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது.

கடந்த வருடத்திலிருந்து பாரியளவிலான இன நல்லிணக்க செயற்பாடுகளை இப்பிரதேச இளைஞர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இதன்படி அட்டாளைச்சேனை பிரதேச SEDR செயற்திட்ட குழு ஆக்டிவ் சிட்டிசன் மற்றும் முரண்பாட்டுக்கான மாற்றுத்தீர்வுகளை அடிப்படையாகக் கொண்டு அதன் பங்குதாரர்களுடன் நடாத்திய ஓர் கலந்துரையாடலின் பெறுபெறாக முரண்பாட்டினை தீர்த்து இன நல்லுறவினை கட்டியேழுப்பும் நோக்கில் முதற்கட்டமாக ஒலுவில் பிரதேச இளைஞர், யுவதிகளுடனான ஒரு செயலமர்வொன்றினை ஒலுவில் பிரதேசத்தின் தாய்ப்பாடசாலையான அல்ஹம்றா மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் 2024.02.25ம் திகதியான ஞாயிற்றுக்கிழமை அன்று நடாத்தியது. இந்த SEDR செயற்திட்டமானது, ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி ஒதுக்கீட்டில் பிரிட்டிஷ் கவுன்சில் (British Council) இன் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டவையாகும். கிழக்கு மாகாணத்தில் SEDR செயற்திட்டக்குழு ஆக்டிவ் சிட்டிசன் நடைமுறைப்படுத்தல்களை அரச சார்பற்ற அமைப்பான முஸ்லிம் எய்ட் (Muslim Aid) மேற்பார்வை செய்திருந்தது. இந்த பயிற்சிப்பட்டறையின் கீழ் இடம்பெற்ற இந்நிகழ்வானது சமூகங்களுக்கு இடையிலான நல்லுறவை வளர்ப்பதற்கும்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்
© 2024, IRJTSR

முரண்பாடினை சுமுகமான முறையில் மாற்று வழித்தீர்வின் மூலம் தீரப்பதை நோக்கமாக கொண்டு நடைபெற்றிருந்தது. இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட உளவள ஆலோசகர் A. Manoos மற்றும் SEDR செயல்நிலை அமைப்பின் இலகுபடுத்துனர் AHS. அஸ்மத்துள்ளா ஆகியோரால் ஒழுங்கு செய்யப்பட்டு வசதி செய்யப்பட்டதுடன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மு. லுஸாந் உட்பட பலர் பங்குபற்றியிரந்தனர். இந்த நிகழ்ச்சியில் ஒலுவிலைச் சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர். இதனை அடுத்து ஒலுவில் பிரதேசத்தினையும் அண்மையிலுள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினையும் மையப்படுத்தியவகையில் இன நல்லிணக்கத்தினை மேலும் கட்டியெழுப்பும் நோக்கில் ஒலுவில் பிரதெச இளைஞர்களினால் அக்னிவில் (Agniwill) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு இதன் மூலமாக இன்று பல செயற்திட்டங்கள் மேற்கொள்ள்பட்டு வருகின்றது. அதில் பல்கலைக்கழகம் மற்றும் கலாசார பன்முகத்தன்மை என்ற கருப்பொருளினை வெளிப்படுத்துவதனை அடிப்படையாகக் கொண்டு சித்திரப்போட்டி ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது அதில் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஒலுவில் பிரதேச இளைஞர்கள், யுவதிகள் பங்குபற்ற தகுதியுடையவர்களாக கூறப்பட்டு வெற்றியாளருகளுக்கு பணப்பரிசிலும் மற்றும் சான்றிதழ்களும் அத்தோடு பங்கு கொள்ளும் அனைவரும் மின் சான்றிதழ்களும் வழங்கப்படும் என கூறப்பட்டது. இப்போட்டியில் இன, மதம், மொழிதன்மையினைக் கடந்து பல பல்கலைக்கழக மாணவர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இதன் ஊடாக பல்கலைக்கழக சமூக மட்டத்திலும் ஒலுவில் பிரதேச இளைஞர், யுவதிகளிடமும் இன நல்லிணக்கம் பற்றிய விழிப்புணர்வினையும் ஐக்கியத்தினையும் ஏற்படுத்த முடியுமனெ எதிர்பார்த்தனர்.

மேலும் இன்நோக்கத்தினை முன்னோக்கி கொண்டு செல்லும் நோக்கில் 2024.03.09 ஆம் திகதி இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாற்றுவழி பிணக்கு தீர்வு தொடர்பான செயலமர்வு ஒன்று வெற்றிகரமாக நடைபெற்றது (ADR Workshop - agniwill) இது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி ஒதுக்கீட்டில் பிரிட்டிஷ் கவுன்சில் (British Council) மூலம் நடைமுறைப்படுத்தப்படும் SEDR செயற்றிட்டமானது கிழக்கு மாகாணத்தின் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவான ஒலுவில் கிராமத்தில் அரச சாரா நிறுவனமான முஸ்லிம் எய்ட் (Muslim Aid) முன்னெடுத்தது. குறிப்பாக தென்கிழக்கு பல்கலைக்கழக சமூக நல்லிணக்க நிலையத்தோடு இணைந்து பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர். ரமீஸ் அபூபக்கர் அவர்களின் வழிகாட்டலுடன் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மாற்றுவழி பிணக்கு தீர்வு தொடர்பான ஒரு நாள் செயலமர்வானது கலைப்பீட ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றிருந்தது. இச் செயலமர்வில் பல்கலைக்கழக சமூக நல்லிணக்க மையத்தின் பணிப்பாளர் Dr. M. அப்துல் ஜப்பார், சமூகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் SM. ஐயூப், செயலமர்வின் வளவாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ. றிஸ்வான் ஆகியோருடன் பிரிட்டிஷ் கவுன்சில் SEDR செயற்றிட்ட வளவாளர், நுஸரத் பெனாஸிர் பாரூக் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். SEDR செயல்நிலை அமைப்பின் இலகுபடுத்துனர் AHS.

அஸ்மத்துள்ளா அவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டு வசதி செய்யப்பட்டதுடன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மு. லுஸாந் உள்ளிட்டோர் பங்குபற்றினர். இடம்பெற்ற இந்நிகழ்வில் சமூகங்களுக்கு இடையிலான நல்லுறவை வளர்ப்பதற்கும் முரண்பாடுகளை சுமுகமான முறையில் மாற்று வழித்தீர்வின் (ADR) மூலம் தீர்ப்பதை நோக்காக கொண்டு அக்னிவில் (Agniwill) சமூக செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்ட செயற்பாடாக இது நடைபெற்றிருந்ததுடன் இதன் முதலாம் கட்டமானது ஒலுவில் இளைஞர், யுவதிகளுக்கும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு பின்னர் 2024.03.31 ஆம் திகதி பிற்பகல் 02:00 முதல் 05:30 மணி வரை Oluvil – Media வின் ஊடக அனுசரணையில் ஒலுவிலில் அமைந்துள்ள துறைமுக அதிகார சபையின் விடுதி நுழைவாயில் அருகாமையில் பல்கலாசார காட்சிப்படுத்தல் என்ற கருப்பொருளினை மையப்படுத்தி தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஒலுவில் இளைஞர்கள் இணைந்து ஒரு கண் காட்சிப்படுத்தலை நடைத்தியது இதில் ஓவியக் கண்காட்சி, புகைப்படக் கண்காட்சி, பல்லினக்காலாசார மதஸ்தளங்கள் அதன் தன்மைகள் எனப் பல விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டது. இந்நிகழ்வுக்கு இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர். கலாநிதி றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக வருகை தந்ததுடன் இங்கு பல்காலாசாரத்தினை பிரதிபளிக்கும் வகைளில் பல காட்சிப்படுத்தல்களும் அதற்கான தெளிவுகளும் வருகைதந்த அனைவருக்கும் வழங்கப்பட்டதுடன் இன நல்லிணக்கத்தின் அவசியமும் இங்கு உரை நிகழ்த்தப்பட்டது. மேலும் இதனை முன்னெடுத்துச் செல்வதில் இப்பிரதேச இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் பங்களிப்பு பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் மாற்றுமதச் சகோதர மாணவர்கள், மதத்தலைவர்கள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் மற்றும் இப்பிரதேச இளைஞர், யுவதிகள் எனப் பலதரப்பட்டவர்கள் கலந்து சிறப்பித்தனர் என்பதும் குறிப்பிட்டுக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். இதன் காரணமாக இனங்களுக்கிடையே உள்ள வெறுப்புணர்வு, சந்தேகம் ஆகிய உணர்வுகள் நீக்கிவிடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் (வினோதினி ராஜேந்திரன், 2021) எனக் கருதப்பட்டது.

மேலும் ஒலுவில் பிரதேசத்தினைச் சேர்ந்த இளைஞர்களின் ஊடாக மாணவர்களுக்கான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சிங்கள, தமிழ் பாடசாலைகளுக்குச் சென்று மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டங்கள் நடாத்தப்படுகின்றது. இதன்போது ஒற்றுமை, இன ஐக்கியத்தின் அவசியம் பற்றிய விடயங்கள் பேசப்பட்டதுடன் இவை தொடர்பாகவும் மாணவர்களுக்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது (நேர்காணல், 2024). இந்நிகழ்ச்சித்திட்டத்தில் ஒலுவில் பிரதேச இளைஞர்களும் பங்குபற்றியிருந்தனர். அந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்தில் இன சமூக உறவுகளை கட்டியெழுப்பும் பல வேலைத்திட்டங்கள் இளைஞர்களால்

மேற்கொள்ளப்படுவதுடன் இளைஞர்களை மையப்படுத்தியும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பல்லின மக்களைக் கொண்ட இலங்கையில் இனங்களிடையே சகவாழ்வு, சமாதனம், இன ஒற்றுமை கட்டியெழுப்பும் நோக்கில் ஏற்படுத்தும் பொருட்டு சமூகத்திற்கு முழுமையான வழிகாட்டுதல் வழங்கி பல முன்னேற்றகரமான பணிகளில் இளைஞர்கள் தம்மை ஈடுபடுத்தி வருவது குறிப்பிடத்தக்கதாகும். இவர்களின் குறிப்பிடத்தக்க சில பணிகள் மக்கள் மத்தியில் சமூக கட்டமைப்பை பேணுவதிலும் சமூகங்களிடையே இன ஒற்றுமையை ஏற்படுத்துவதிலும் பாரிய பங்களிப்பினை செய்து வருகின்றது (வினோதினி ராஜேந்திரன், 2021) எனலாம்.

## இன நல்லுறவை கட்டியெழுப்புவதில் இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

இலங்கையில் இன நல்லுறவை ஏற்படுத்துவதற்காக அட்டாளச்சேனை பிரதேச செயலகத்திற்குறப்பட்ட ஒலுவில் பிரதேச இளைஞர்களால் அண்மைக்காலமாக பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையினை அறியமுடிந்தாலும் இன நல்லுறவை கட்டியெழுப்புவதில் இப்பிரதேச இளைஞர்கள் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். அத்தகைய சவால்களை பின்வரும் அடிப்படையில் அடையாளம் காணலாம்.

மொழிப்பிரச்சினை காணப்படுதல் : ஒலுவில் பிரதேச மக்களிடையே இன நல்லுறவை கட்டியெழுப்புவதில் மிகப்பெரிய சவாலாக மொழி தொடர்பான பிரச்சினைகள் காணப்படுகிறது. மொழி என்பது பல்லின சமூகங்களை இணைக்கும் பிரதான காரணியாகும். ஏனைய இன மக்களுடன் தொடர்பையும் உறவையும் பேணுவதற்கும் மொழி ஒரு தடையாக காணப்படுகின்றது (வினோதினி ராஜேந்திரன், 2021). குறிப்பாக இங்கு இளைஞர்கள் இன நல்லிணக்கத்தினை கட்டியெழுப்புவதில் தடையாக அமைவதில் இரண்டாம் மொழி ரீதியான அறிவின்மையையும் உள்ளடக்க முடியும். அந்த வகையில் இப்பிரதேசத்தில் பெரும்பாண்மையினராக முஸ்லிம்களே வாழ்வதனால் அவர்கள் மரபுவழியாக தமிழ் மொழியினையே தங்களின் எல்லா செயற்பாடுகளையும் மேற்கொள்வதுடன் ஏனைய மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதனை தவிர்க்கின்றனர். அத்துடன் சிங்கள மொழியில் பேசக்கூடிய மக்கள் இக்கிராமத்திலிருந்து தூரப்பிரதேசத்தில் அமைந்துள்ளமையானது தமிழைத்தவிர ஏனைய மொழிகளை கற்றுக்கொண்டு பேசுவதில் இவர்கள் சிரமத்தினை எதிர்கொள்வதனை அவதானிக்கமுடிகின்றது. மேலும் ஏனைய இன சமூகத்திடம் தொடர்பினை மேற்கொள்ளவும், இவர்களிடையே புரிந்துணர்வை வளர்ப்பதற்கும் இரண்டாம் மொழி பற்றிய அறிவானது இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கு அவசியமானதாக காணப்படுகின்றது. ஆனால் இரண்டாம் மொழி ரீதியான அறிவு, பயிற்சியானது இங்குள்ள பெரும்பாலான இளைஞர்களிடம் காணப்படவில்லை. இதன்படி இப்பிரதேச இளைஞர்களுக்குள்ள சிங்கள மொழிப்பிரச்சினையின் காரணமாக இன நல்லிணக்கத்துக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நாடாத்துகின்ற போது தென்கிழக்கு

பல்கலைக்கழகத்தினை சேர்ந்த சிங்கள மொழியறிவுள்ள தமிழ் மாணவர்களே சிங்கள மொழியில் நிகழ்ச்சிகளை தெளிவுபடுத்த வேண்டிய தேவைப்பாடு எழுந்துள்ளன என்பதும் பாரிய சவாலாக காணப்படுகின்றது.

இப்பிரதேச பொதுமக்கள் மற்றும் இளைஞர், யுவதிகள் இன நல்லுறவு என்ற வார்த்தையின் அடிப்படை அர்த்தத்தை அவர்களால் அறிய முடிந்திருந்தது. இருப்பினும் ஒருசில இளைஞர்களின் கருத்துக்களில் இன நல்லிணக்கம் என்றால் என்ன என்பது பற்றி அவர்களுக்கு எந்த புரிதலும் இல்லை என்ற கருத்தும் தெரிய வந்திருந்தது (வினோதினி ராஜேந்திரன், 2021). அத்துடன் இங்குள்ள இளைஞர்களுக்கு மோதல் மற்றும் மோதல் தீர்வு கற்கைநெறி தொடர்பிலான அறிவு வேறுபட்ட தன்மையினதாக காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இதனால் இக்கற்கை பற்றி தெளிவாக விளங்குவதில் இவர்களிடையே பாரிய ஏற்றத்தாழ்வு நிலவுகின்றது. ஆகவேதான் இன நல்லுறவு பற்றிய எண்ணக்கரு மற்றும் நடைமுறை ரீதியிலான புரிதலும் விழிப்புணர்வும் இவர்களிடையே கீழ்மட்டத்தில் காணப்படுகின்றது எனலாம்.

இப்பிரதேச இளைஞர்களிடையே இன நல்லிணக்கம் தொடர்பான எதிர்கால அடைவுகள் மற்றும் பெறுபேறுகள் பற்றிய தெளிவின்மை காணப்படுவதனை அவதானிக்க முடிந்தது. பெரும்பாளான இளைஞர்களின் கருத்துக்களிலிருந்து அறியவருவதானது இன நல்லிணக்கம் பற்றி தெளிவான புரிதல் அவர்களிடம் காணப்படவில்லை என்பதனை அறியகிடைத்தது. மேலும் பொதுவான செயற்பாடுகளில் ஈடுபடாமையும், இன நல்லிணக்க செயற்பாடுகளின் ஆர்வமும் ஊக்கமும் குறைந்தவர்களாகவும், சமூகத்தை சீர்திருத்த தங்களால் மட்டும் முடியாது என்ற மனோநிலையுடன் இருப்பதனையும் அறியமுடிந்தது அத்துடன் இவர்களில் சிலர் சமூக அக்கறையற்றவர்களாகவும், பல்லின மக்களிடையே ஒற்றுமை மற்றும் ஐக்கியம் குறித்து ஈடுபாடற்றவர்களாகவும் உள்ளனர் என்பதும் தெரியவருகின்றது.

ஒலுவில் பிரதேச இளைஞர்களால் மேற்கூறப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும் சமூகத்திற்கு சேவைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் தற்கால இளைஞர்களிடம் காணப்படுகின்றது. எனினும் அதனை எவ்வாறு முறையாக மேற்கொள்வது என்று தெரியவில்லை எனவே, இதற்கான முறையான பயிற்சி நெறிகளை வழங்கும் பட்சத்தில் அவர்களால் அதனை முறையாக முன்னெடுக்க முடியும் (வினோதினி ராஜேந்திரன், 2021). இன நல்லிணக்க செயற்திட்டங்களை முறையற்றவகையில் ஒழுங்கமைப்பதனால் அதன் பெறுபேறு பொதுமக்களிடம் சென்றடைவதில் சிக்கல் நிலை ஏற்படுகின்றது.

இன நல்லிணக்கம் மற்றும் அதனை சிறப்பாக மேற்கொள்வதற்கான பயிற்சி அல்லது அனுபவம் அதாவது இப்பிரதேசத்தில் இன நல்லிணக்கம் பற்றி இளைஞர்கள் மத்தியில் நடைமுறைப்படுத்தல் தொடர்பான பொதிய அனுபவமும்



© 2024, IRJTSR 

பயிற்சியும் பொதாமலுள்ளது ஏனெனில் இவர்களை மையப்படுத்தி பரந்தளவிலான கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் குறிப்பிட்ட சிலதே நடைபெற்றுள்ளமையினால் இன நல்லிணக்கம் பற்றிய தேடல் மற்றும் பங்குபற்றுதல் மிகக் குறைவான மட்டத்திலேயே காணப்படுகின்றது. இதுவும் ஒருவகையில் இளைஞர்களின் இன நல்லிணக்க செயற்பாட்டிற்கு தடையாக அமைந்து விடுகின்றது எனலாம்.

இலங்கையில் வரலாற்றில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற கசப்பான மனப்பதிவுகள் இப்பிரதேச மக்களிடையே காணப்படுவதானது ஒரு முக்கியமான சவாலாகும். இதன்படி கடந்த காலங்களில் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறை நிகழ்வுகளை மறவாமை குறிப்பாக திகனக்கலவரம், பேருவலைப்பிரச்சினை, முஸ்லிம் பெண்களின் ஆடை தொடர்பான சர்ச்சைகள் முதலியவற்றினை இன்றும் இப்பிரதேச பொதுமக்கள், இளைஞர்கள் மறக்காமல் ஞாபகக்படுத்திக்காட்டுவது இன நல்லிணக்கத்தினை எதிர்காலத்தில் சிறப்பாக மேற்கொள்ள சவாலாகவுள்ளமையினை அறிய முடிகின்றது. இதன் விளைவாக இனங்களுக்கிடையில் அவநம்பிக்கை மற்றும் பதற்ற நிலை ஏற்படுகின்றது.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு சமூகத்திலுள்ள பெரும்பாளான இளைஞர்களுடைய பங்குபற்றல் முக்கியமானதாகும். ஆயினும் சமூகத்தில் காணப்படும் இளைஞர்களுடைய இன நல்லிணக்க செயற்பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. அதாவது பல்லின சமூகங்களுக்கு மத்தியில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான நிகழ்வுகளை இப்பிரதேசத்தில் ஏற்பாடு செய்து நடாத்துகின்ற போது பொதுமக்கள் மற்றும் சில இளைஞர்கள் புறக்கணிக்கின்ற தன்மை காணப்படுகிறது.

இப்பிரதேச இளைஞர்களை ஒன்றிணைப்பதிலுள்ள சிக்கல் காணப்படுகின்றது. இதன்படி தகவல்களை அறிந்து இப்பிரதேச இளைஞர்கள் இன நல்லிணக்க நிகழ்வுகளுக்கு வருகைதருவதில் போடுதுபோக்கும், இது தொடர்பில் கீழ் மட்டத்திலான ஆர்வத்தினையே வெளிக்காட்டுகின்றனர். எடுத்துக்காட்டாக இறுதியாக நடைபெற்ற இன நல்லிணக்க காட்சிப்படுத்தலில் இப்பிரதேசத்தினை சார்ந்த பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் போதியளவு பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சமுதாயத்தின் உள்ள ஒரு பகுதி இளைஞர்;கள் சமூக அக்கறையற்றவர்களாக காணப்படுவதனால் குறிப்பிட்ட ஒரு சில இளைஞர்களே எல்லா விடயங்களிலும் தலைமை தாங்கி முன்னின்று செயலாற்றவேண்டிய தேவை ஏற்படுவதும் இங்கு பாரிய சவாலாக நோக்கப்படுகின்றது. அத்துடன் இளைஞர்களின் ஒரு சிலரே இன நல்லிணக்கச் செயற்திட்டங்களை மேற்கொண்டாலும் இவர்களின் பின்னர் இச்செயற்திட்டத்தினை தொடர்ந்து முன்னோக்கி கொண்டு செல்வதற்கான


© 2024, IRJTSR

இயலுமை கொண்ட எதிர்கால சந்ததியினை உருவாக்கி வழிப்படுத்தாமல் இவர்கள் தங்களுடன் மட்டும் இன நல்லிணக்கச் செயற்பாட்டினை சுருக்கிக்கொள்ளும் போக்கும் இப்பிரதேசத்தில் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

ஆய்வுப் பிரதேச பொது மக்கள் ஏனைய சமூகத்துடன் தொடர்பற்ற நிலை அல்லது ஏனைய சமூக குழுக்களோடு தொடர்பின்மை பாரிய சவாலாக நோக்கப்படுகின்றது. அட்டாளச்சேனை முஸ்லிம், சிங்களம், தமிழ் போன்ற ஒழுங்கமைப்பில் இனக்குழுக்கள் காணப்படுகின்றது. ஆயினும் ஒலுவில் பிரதேசமானது முழுக்க முஸ்லிம் சமூகத்தினையே கொண்டு காணப்படுவதனால் ஏனைய சமூகப்பிரிவுகளுக்கிடையிலான சமூக தொடர்பானது மிகக் கீழ்மட்டத்திலேயே வெளிப்படுத்தப்படுகின்றது. இதன்படி மாற்றுமத சகோதரர்கள் இப்பிரதேசத்திலிருந்து தூரப்பிரதேசங்களில் வசிப்பது (தீகவாவி, அம்பறை) இன நல்லிணக்கத்தினை மேலும் அபிவிருத்தியடையச் செய்வதில் சவாலாகவுள்ளது. குறிப்பாக ஒருசில தமிழ் குடும்பங்கள் மாத்திரம் திறைக்கேணி என்ற அண்மை பிரதேசத்தில் (பாலமுனை) வாழ்தாலும் இப்பிரதேச மக்களோடு இளைஞர்களின் தொடர்புகள் வரையறுக்கப்பட்ட வகையிலேயே காணப்படுகின்றது. அதேபோன்று சிங்கள மக்கள் தீகவாவி பிரதேசத்திலையே செறிந்து வாழ்வதனால் பிரதேச ரீதியான தொடர்பற்றவர்களானவே இவர்கள் காணப்படுகின்றனர்.

இப்பிரதேச இளைஞர்களின் சமூக பிறழ்வான நடத்தைகள் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றதனை அவதானிக்க முடிகின்றது. இதன்படி இளைஞர்களிடத்தில் அதிகமான போதைப்பொருள் பாவனை ஊடுறுவிவிட்டது. இதன் விளைவால் இக்கிராம இளைஞர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி வருகின்ற நிலைமையே அதிகமாக காணப்படுகின்றது. இளைஞர்களின் இவ்வாறான போதைப்பொருள் பாவனை காரணமாக சமூகத்தில் இன நல்லிணக்க செயற்பாடுகளில் இளைஞர்களுடைய பங்கேற்பானது பற்றாக்குறையானதாக காணப்படுகிறது.

**பரிந்துரைகள்**

மேற்கூறப்பட்ட இன நல்லுறவை கட்டியெழுப்புவதில் இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்களை தீர்ப்பதற்கான பரிந்துரைகளாக பின்வருவன முன்வைக்கப்படுகின்றன.

- இளைஞர்களுக்கிடையில் இன நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதற்கான செயற்திட்டத்தையும் கொள்கையையும் அரசு கொண்டுவருதல் வேண்டும். அத்தோடு பல்லின மக்களுக்கிடையிலான இன நல்லிணக்கத்தினை பாதிக்கக்கூடிய விடயங்னை அரசு உடனடியாக தடை செய்தல் வேண்டும்.
- எல்லாக் கல்வி நிறுவனங்களிளும் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை மேம்படுத்தும் விடயங்களினை உள்ளடக்கிய திட்டங்களை முன்வைத்தல்


© 2024, IRJTSR

வேண்டும். குறிப்பாக கல்வி நிறுவனங்களில் (பாடசாலை, பல்கலைக்கழகம்) இருந்தே நல்லிணக்கம் தொடர்பான ஊக்கப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

- இப்பிரதேச இளைஞர்களுக்கு தொடர்ந்து இன நல்லிணக்கம் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொண்டு வருதல் வேண்டும். அத்துடன் இப்பிரதேச பொது மக்கள், தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகத்தினருக்கும் இன நல்லிணக்கம் தொடர்பாக விழிப்புணர்வு, புரிந்துணர்வினை மேம்படுத்தி அபிவிருத்தி செய்தல்.
- இப்பிரதேசத்தில் காணப்படும் இளைஞர்களுக்கு இரண்டாம் மொழியான சிங்கள மொழி தொடர்பான கற்றல் பயிற்சிகளை மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல். அத்தோடு பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் இரண்டாம் மொழியின் அவசியத்தினை உணர்த்துதல்.
- இப்பிரதேச இளைஞர்களின் இன நல்லிணக்க செயற்பாட்டிற்கு பொதுமக்கள், சமய நிறுவனங்கள், இளைஞர் யுவதிகள் மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகமும் மேலும் ஊக்குவிப்பு வழங்குதல் வேண்டும்.
- சமாதானம், இன நல்லிணக்கம் தெடர்பான கற்கை நெறியினை தனியார் தொண்டு நிறுவனங்களின் மூலமாகவோ அல்லது தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினூடாகவோ வழங்க வேண்டும்.
- குடும்ப உறுப்பினர்கள் இளைஞர்களின் இன நல்லுறவுக்கான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு தடைகளை விதிக்காது அவர்களுக்கு வழிவிட்டு ஊக்கப்படுத்தல் வேண்டும்.
- இன நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தினை இக்கிராமத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் உணர்த்துதல் இதன்படி இன ஒருமைப்பாட்டின் அவசியம் தொடர்பாக விழிப்புணர்வு திட்டங்களை இப்பிரதேசத்தில் பொது இடங்களில் ஏற்பாடு செய்து நடாத்தப்படுதல் இதன்போது அனைத்து இன மக்களும் ஒன்றிணைவதற்கான வாய்ப்புகள் உருவாகும்.
- இளைஞர்களுக்கு இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு தன்னாரவ தோண்டு நிறுவனங்களினூடாக செயலமர்வுகளையும், பயிற்சி பட்டறைகளையும் நடாத்தக் கோருதல் வேண்டும்.
- இப்பிரதேச இளைஞர்கள் ஏனைய பல் கலாசார நிகழ்வுகளில் பங்குகொள்வதற்கான சந்தரப்பத்தினையும் வாய்ப்பினையும் அட்டாளச்சேனை பிரதேச செயலகம் உருவாக்கி கொடுத்தல்.
- சமூக ஊடகங்களினூடாக இளைஞர்கள் இன நல்லிணக்கத்தினை சீகுலைக்கும் வெறுப்பு பேச்சுக்களை பேசுவதனை தடுப்பதற்கான உரிய விழிப்புணர் நடவடிக்கைகளை இளைஞர்கள் மத்தியில் ஏற்பாடுசெய்தல்.
- ஒலுவிலின் ஊடங்களான Oluvil – Media மற்றும் Oluvil INFO போன்றவற்றின் அனுசரணையோடு மேற்கொள்ளும் போது மக்கள் அனைவருக்கும் இப்பிரதேச இளைஞர்களின் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பில் அறிய முடியும்.
- இப்பிரதேச இளைஞர்களுக்கு மத்தியில் நாம் அனைவரும் இலங்கையர் என்ற எண்ணப்பாட்டிக்கு வரும்வகையிலான திட்டங்களை மேற்கொள்ளுதல்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2024, IRJTSR

- பொதுமக்கள் மற்றும் இளைஞர்களிடையே காணப்படும் கடந்தகால கசப்பான மனப்பதிவுகளை மாற்றியமைத்து இன ஐக்கியத்தை கொண்டுவருவதற்கு வழிகளை ஊக்குவிப்பதுடன் சமாதானம் சார்ந்த கட்டமைப்புசார் செயற்பாடுகளில் இளைஞர்களின் பங்களிப்பின் அவசியத்தினை உணர்த்தச்செய்தல் வேண்டும்.
- அரசாங்கம் கொள்கை உருவாக்கத்தின் போது இளைஞர்களுடைய கருத்துக்களையும் அலோசனைகளையும் உள்வாங்குதல்.

## முடிவுரை

இலங்கையினை பொருத்தமட்டில் அண்மைக்காலமான பேசப்பட்டு வருகின்ற எண்ணக்கருவாக இன நல்லிணக்கம் காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக இவற்றில் இளைஞர்களின் பங்குபற்றுதல் சமகாலத்தில் அதிகமாக உணரப்படுகின்றன. அந்த அடிப்படையில் இலங்கை பல்லினத் தன்மை கொண்ட நாடாக காணப்படுவதனால் இன நல்லிணக்க செயற்பாடுகள் ஆரம்ப காலம் முதல் தேவைப்பட்டிருக்கின்றது. ஏனெனில் இலங்கையில் அவ்வப்போது ஏற்பட்ட உள்நாட்டு யுத்த வடுக்கள், ஈட்டர் தாக்குதல் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் இவ்வெண்ணக்கருவின் அவசியத்தினை பரந்துபட்ட அளவில் உணர்தியுள்ளது. அதிலும் சமகால இன நல்லிணக்க செயற்பாட்டிற்கு இளைஞர்களின் தேவைப்பாடானது அதிகமாக எடுத்துரைக்கப்பட்டு வருகின்றது. ஆயினும் யுத்தத்திற்கு பின்னரான சமூக சூழ்நிலையில் உள்ள இளைஞர்களின் மத்தியில் இன்றும் சமாதானம் என்பது அடையப்பட முடியாத ஒன்றாகவே உருமாறியுள்ளது. சமகால இளைஞர்கள் மத்தியில் சமாதானத்தில் பங்குபற்றல் என்பது காத்திரமான வகிபங்கினை கொண்டுள்ளனர். அந்தவகையில் இளைஞர்களின் பங்குபற்றல் இன்மையினால் நாட்டின் நிலையான அபிவிருத்தியினை கொண்டுவருவதற்கும், சுதந்திரம், கலாசார பாதுகாப்பு ஒருங்கிணைப்பு சமத்துவம், ஜனநாயகத்தை நிலைபெற செய்வதற்கும் இளைஞர்களுடைய அமைதியினை பாதிப்பதாக காணப்படுகின்றது. எனவே சமாதானத்தை கட்டியெழுப்புவதில் இளைஞர்களுடைய பங்குபற்றல் என்பது மிகவும் அவசியமான விடயமாகும் (விஜயகுமார் & மங்களதர்சினி, 2021). இதன்படி ஒலுவில் பிரதேச இளைஞர்கள் ஆரம்ப காலங்களில் இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதில் காணப்பட்ட வரையரைகளை தான்டி வெளியில் செயற்பட நினைகின்றமையானது பாராட்டத்தக்கதாயினும் அவ்வாறான வரையரைகளை விட்டு வெளியேறுமிடத்து முறையான ஒழுங்கமைப்பு மற்றும் செயற்திட்டங்களை முன்வைத்து வினைதிறனுடன் குறித்த நிகழ்சியினை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் இப்பிரதேசத்தில் உள்ள ஒரு சில இளைஞர்களை மட்டும் உள்ளடக்கிய வகையில் இன நல்லிணக்க செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனை தவிர்த்து பரந்தளவில் தங்களில் செயற்பாடுகளை வெளிப்படுத்தி ஏனைய இளைஞர்களின் ஆலோசணை மற்றும் கருத்துக்களை கேட்டு மேற்கொள்ளும் போதே இன நல்லிணக்கத்திற்கான இளைஞர்களின் பங்களிப்பு வெற்றியளிக்கும்.



© 2024, IRJTSR 

## உசாத்துணைகள்

[1] Aliff, S.M. (2016). Reconciliation in post war Sri Lanka. Retrieved from : http://www.researchgate.net/publication/307905734.

[2] Emelie molleli. (2012). Sri Lanka unites and reconciliation-Transformation through change agents of a war infected nation. www.diva-portal.org

[3] Minsara. J.F. (2020). A Study on social harmony based on Buddhist and Muslim relationship Sri Lanka, Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.

[4] வினோதினி ராஜேந்திரன் (2021). இன நல்லுறவைக் கட்டியெழுப்புவதில் இளைஞர்களின் பங்கேற்பு : தலவாக்கலை லிந்துலை பிரதேச இளைஞர்களின் இன நல்லுறவு சமாதான செயற்பாடுகளை மையப்படுத்திய ஓர் ஆய்வு, Plural Sri Lanka Exploring Paths to Reconciliation, National Peace Council of Sri Lanka (P 270-289).

[5] விஜயகுமார். ரா, மங்களதர்சினி சரந்தாமன் (2021). சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் இளைஞர்களின் பங்கேற்பு - யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு, Plural Sri Lanka Exploring Paths to Reconciliation, National Peace Council of Sri Lanka (P 392-417).

[6] (n.d). இலங்கையை மீளிணக்கம் செய்தல் : இளைஞர்களின் கருத்துக்களை உள்வாங்குதல், சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம். Retrieved from : https://cejsrilanka.org/wp-content/uploads/ReconcilingVoices-of-Youth-Count-Tamil-Press-1-1.pdf

[7] பாத்திமா ஸஜீதா. ரீ. (2019). இலங்கை அரசியலில் சிங்கள-பௌத்த-முஸ்லிம் உறவு, Retrieved from : https://www.researchgate.net/publication/343904658_Sinhala-Buddhist-Muslim_relation_in_Sri_Lankan_Politics?_tp=eyJjb250ZXh0Ijp7ImZpcnN0UGFnZSI6InB1YmxpY2F0aW9uIiwicGFnZSI6InByb2ZpbGUifX0

[8] பழீல் எம்.ஏ. (2001). இலங்கையின் பன்மைச் சமூக கலாசாரக் கூறுகளிடையே நல்லிணக்கம், கல்முனை - கோல்டன் அச்சகம்

[9] நடசேன், ஜி. (2000). இலங்கை இன முரண்பாடுகளின் வரலாறு, அபிராமி விளம்பர நிறுவனம்

[10] நிஸ்பா. எம்.எஸ்.எப். (2019). சமகால இலங்கையில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் முஸ்லிம்களின் பங்கு : களுத்துறை முஸ்லிம் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

[11] சஜிதா. ரி.பா. (2017). யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் இன நல்லிணக்கம், அரசியல் விஞ்ஞானத்துறை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம். Retrieved from : https://www.researchgate.net/publication/318348515/Ethnic_Harmony in Post-war Sri Lanka

[12] (n.d). நல்லிணக்க மீள கட்டியெழுப்புவதில் இளைஞர்களின் பங்கு, (வீரகேசரி) Retrieved from : https://www.virakesari.lk/article/64646 2019.09.20

[13] ஹபிதுல்லா. மு. (2019). இன நல்லுறவு, சமாதானம் எனபவற்றைக் கட்டியெழுப்புவதில் முஸ்லீம் சமய நிறுவனங்களின் பங்களிப்பு (கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் இன நல்லுறவு சமாதானச் செயற்பாடுகளை மையப்படுத்திய ஓர் ஆய்வு), கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR